## நீலகிரி மாவட்ட வேளாண் வானிலை முன்னறிக்கை மடல்

வெளியீடு : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை. & இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்

தேதி 09.05.2017

### சமீபகாலத்திற்கான வானிலை அறிக்கை

1. சமீப காலத்தில் மாவட்டத்தில் லேசானது முதல் மிதமானது வரை மழை பெறப்பட்டது.

2. சமீப காலத்தில் தட்பவெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதம் - அதிகபட்ச வெப்பநிலை 23$^{o}$ - 25$^{o}$ செ. மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 11$^{o}$-13$^{o}$செ. ஆக இருந்தது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 50-67% மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 79-82% இருந்தது. காற்றின் வேகம் 4-8 (கிலோ.மீ/மணிக்கு).

### நீலகிரி மாவட்டத்திற்கு அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| வானிலை குறிப்புகள் | 10.05.2017 | 11.05.2017 | 12.05.2017 | 13.05.2017 | 14.05.2017 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 9 | 20 | 5 | 6 | 6 |
| அதிகபட்ச தட்ப வெப்பம் ($^{0}$ செ.) | 23 | 23 | 23 | 24 | 24 |
| குறைந்தபட்ச தட்ப வெப்பம் ($^{0}$ செ.) | 11 | 11 | 11 | 10 | 10 |
| மேகமூட்டம் (ஒக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 65 | 65 |
| குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 65 | 65 | 65 | 75 | 75 |
| காற்றின் வேகம் (கிலோ.மீ.,மணிக்கு) | 5 | 5 | 5 | 4 | 4 |
| காற்றின் திசை | 200 | 200 | 200 | 230 | 230 |

**வானிலை சார்ந்த சாகுபடி குறிப்புகள்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- மண்ணில் ஈரப்பதத்தை பாதுகாக்க, மூடாக்கு இடவும்.
- மிளகு பயிரில் இரண்டு ஆண்டுகளாக சுண்ணாம்பு இடாமல் இருந்தால், முதல் கோடை மழை கிடைத்தவுடன் ஒரு செடிக்கு 500 கிராம் சுண்ணாம்பு இடவும்.
- இஞ்சி பயிருக்கு, கோடை மழைக்குப் பின், மண் நன்றாக உழுது, 1 மீட்டர் அகலம், 25 செ.மீ. உயரம் மற்றும் தேவையான அளவிலான நீளம் உள்ளவாறு பாத்தி அமைத்து, 20 முதல் 25 கிராம் இஞ்சி கிழங்கு உள்ளவாறு தேர்வு செய்து நடவு செய்யவும்.
- எதிர்ப்பாக்கப்படும் மழையினால் உருளைக்கிழங்கு பயிரில் பின் இலை கருகல் நோய் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளதால், மேன்கோசெப் மருந்து ஒரு லிட்டர் நீரில் 2 கிராம் என்கிற அளவில் இலை வழியாக தெளிக்கவும்.
- காய்கறி பயிர்களில் சாம்பல் நோயை கட்டுப்படுத்த 15 நாட்களுக்கு ஒரு முறை நனையும் கந்தகம் 2 கிராம்/லிட்டர் தெளிக்கலாம்.
- லோசனது முதல் மிதமான மழை அடுத்த ஐந்து நாட்களுக்கு எதிர்பார்க்கப்படுகிறது. மிளகுச் செடியில் வாடல் நோயை தடுக்க, ஒரு செடிக்கு 25 கிராம் டிரைகோடெர்மா விரிடி, 25 கிராம் சூடோமோனாஸ் புளுரோஸென்ஸ் மற்றும் 500 கிராம் வேப்பம் புண்ணாக்கு கலந்து இடவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்,**
**உதகை**